பொது நூலகம்
மாநகராட்சி மன்று
22-5-1993
யாழ்ப்பாணம்

Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 09 | [22-05-93] | சனிக்கிழமை | ஓசை 93

## பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

1991 ஆகஸ்ட் மற்றும் 1992 ஏப்பிரல் (விசேட) இல் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழகத்திற்கு தகுதிபெற்ற மாணவர்களிடமிருந்து பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் கடந்த வியாழக்கிழமை பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவிடம் இருந்து 1992/93-ம் கல்வியாண்டுக்குரியபல்கலைக்கழக அனுமதிகள் சம்பந்தமான பத்திரங்களையும், கைந்நூல்களையும் கொண்டு வந்துள்ளார். இவை 1991 ஆகஸ்ட்/1992 ஏப்பிரல்

(4ஆம் பக்கம் பார்க்க)

### கேரதீவு – சங்குப்பிட்டி

# பாதையை திறக்க மீண்டும் கோரிக்கை

### சர்வதேச நிறுவனங்கள் அரசிடம் விடுத்தன

[கொழும்பு]

**பூநகரி – சங்குப்பிட்டி பாதையை போக்குவரத்துக்கு திறந்து விடும்படி சிறிலங்கா அரசிடம் பல்வேறு சர்வதேச தொண்டர் அமைப்புகளும் மீண்டும் கோரிக்கை விடுத்து வருவதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

யாழ். குடாநாட்டுக்கு அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துப்பொருள்களின் தடையற்ற விநியோகத்திற்கு மேற்படி கடற்பாதையை திறந்து விடுவதை பல்வேறு சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் பூரணமாக விரும்புகின்றன.

இதைத் தொடர்ந்து மேற்படி பாதையூடாக குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கும் சாத்தியமான செயற்பாட்டை ஆரம்பிப்பதற்காக மேற்படி பாதையை திறந்துவிடும்படி அரசுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றன.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு மற்றும் அகில உலக கிறிஸ்தவ அமைப்புகளின் சம்மேளனம் போன்ற அமைப்புக்கள் உட்பட மேலும் பல தொண்டர் ஸ்தாபனங்களும் மேற்படி பாதையைத் திறந்து குடாநாட்டுக்கான அத்தியாவசிய பொருள்களின் விநியோகத்தை சீராக்கும் முயற்சியில் தீவிர அக்கறை காட்டி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக கடந்தசில நாட்க

(4ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறை துறைமுக

### இறங்குதுறையை திருத்த கொழும்பில் பேச்சு

[கொழும்பு]

பருத்தித்துறை துறைமுக இறங்குதுறையை திருத்தி அமைப்பதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற் கட்டமாக கொழும்பு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகின்றன. அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மேற்படி விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இவ் இறங்குதுறையை

எடுத்துக் கூறப்பட்டுள்ளது. எனினும் இவ்விடயத்தை ஏற்றுக்கொண்ட கொழும்பு அதிகாரிகள் இவ்விடயத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து பரிசீலிப்பதாக உறுதி வழங்கியதாக உத்தியோகபற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பிரிட்டிஷ் தூதுவராக பிரெட்மன் வீரக்கோன்

(கொழும்பு)

ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரெட்மன் வீரக்கோன் இங்கிலாந்துக்கான உயர் ஸ்தானிகராக நியமனம் பெறவுள்ளார்.

எயர்லங்கா இயக்குநர் சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவர் நியமனம் பெறவுள்ளார்.

### 'அவ்ரோ' நோட்டம்

(குருநகர்)

நேற்று முற்பகல் 11.00மணியளவில் சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான அவ்ரோ ரக விமானம் ஒன்று யாழ்நகரையும் புறநகர் பகுதிகளையும் பெரிய வட்டமிட்டு பல தடவைகள் நோட்டமிட்டுச் சென்றது.

### துப்பாக்கி பிரயோகம்

[குருநகர்]

மண்டைதீவு சிறிலங்கா இராணுவக் காவலரணில் இருந்து நேற்று நண்பகல் 12-30 மணியளவில் யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

குருநகர், அலுப்பாந்தி, நாவாந்துறை, கொட்டடிப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. (21)

### தினமும் அறிக்கை

[கொழும்பு]

பிரேமதாசா கொலை தொடர்பாக விசாரணை நடத்த அமைக்கப்பட்ட விசேட புலனாய்வுக் குழு தனது விசாரணை தொடர்பான விபரங்களை தினமும் பொலிஸ் மா அதிபருக்கு தெளிவுபடுத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மீட்புநிதி சேகரிக்கப்படவுள்ளது.

இதன்படி காலை 9.00 மணி முதல் 10.00 மணிவரை வலிகாமம் தீவக பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு உட்பட்டோர் நல்லூர்மங்கையர்க்

# தேர்தல் காலத்தில் அரசு முறைதவறியது

## கண்காணிப்பு குழு தெரிவிப்பு

[கொழும்பு]

**மாகாணசபை தேர்தல் காலங்களில் அரச கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வானொலி, தொலைக்காட்சி என்பன நடுநிலைதவறி செயற்பட்டதாக தேர்தலை கண்காணித்த சர்வதேசக்குழு கண்டனம் தெரிவித்துள்ளது. இதேபோன்று தேர்தலுக்கு முதல்தினம் அரச ஊழியர்களுக்கு சம்பளஉயர்வு உட்பட பல சலுகைகளை ஜனாதிபதி விஜயதுங்கா அறிவித்தமையை இக்குழு கண்டித்துள்ளது.**

இதேவேளை தேர்தல் பிரசாரத்தின்போது தெரிவிக்கப்பட்ட அநேக முறைப்பாடுகள் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்குப் பாரதூரமானவை அல்ல என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

பிரேமதாசா, லலித் படுகொலைகள் பதற்ற சூழ்நிலையை ஏற்படுத்தினாலும் உணர்ச்சி நிலை தணிக்கப்பட்டு தேர்தல் அமைதியாக நடைபெற்றது. 72 சதவீதவாக்கு பதிவாகின. பதற்றம் ஏதும் நிலவவில்லை என்றும் அவதானிகள் குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் உள்ளது போல் விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலான சிக்கல் மிக்க விருப்பத்தெரிவு வாக்கெடுப்பு செல்லுபடியற்ற வாக்குகளின் எண்ணிக்கை

( 4 ஆம் பக்கம் பார்க்க )

### தென், வடமேல்மாகாண ஆட்சி ஐ. தே. கவிடம்

(கொழும்பு)

தென். வடமேல் மாகாண முதலமைச்சர்களாக ஐக்கிய தேசியக் கட்சியினர் பதவி ஏற்றுள்ளனர். இம் மாகாணங்களில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள போதும் எதிர்க்கட்சிகள் மொத்த ஆசனங்களைவிட குறைந்தளவு ஆசனங்களையே பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென் மாகாணசபை முதலமைச்சராக எம். எஸ். அமரசிறி நேற்று பதவி ஏற்றார். அவர் ஆளுநர் பாகீர்மார்க்கார் முன்னிலையில் காலியில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் மாகாண உள்ளூராட்சி, கல்வி, காணி ...

வடமேல் மாகாணசபை முதலமைச்சராக காமினி ஜெயவிக்ரம பெரேரா பதவி ஏற்றுக் கொண்டார்.

இதேசமயம் மத்திய, சப்பிரகமுவா, வடமத்திய மாகாணங்களுக்கான முதலமைச்சர்கள்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

தென், வடமேல் மாகாணங்களில்

### ஐ. தே. கவை ஆட்சியமைக்க அழைத்தமை தவறானது

(கொழும்பு)

தென்மாகாணம், வடமேல் மாகாணம் என்பனவற்றில் ஐக்கிய தேசியக் கட்சியினரை ஆட்சியமைக்க அழைத்தமை ...

அரசியல்துறை பேராசிரியர் றோகான் எதிரிசிங்க ஏ. எவ். பிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் இரண்டு ...

விடுவதை பல்வேறு சர்வதேச ருள்களை விநியோகிக்கும்

பருத்தித்துறை துறைமுக

# இறங்குதுறையை திருத்த கொழும்பில் பேச்சு

[கொழும்பு]

பருத்தித்துறை துறைமுக இறங்குதுறையை திருத்தி அமைப்பதற்கு வேண்டிய முயற்சிகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன.

இதன் முதற் கட்டமாக கொழும்பு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகின்றன. அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மேற்படி விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இவ் இறங்குதுறையை திருத்தி அமைக்க வேண்டிய தன் அவசியம் குறித்து மேற்படி அமைச்சு அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. எனினும் இவ்விடயத்தை ஏற்றுக்கொண்ட கொழும்பு அதிகாரிகள் இவ்விடயத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து பரிசீலிப்பதாக உறுதி வழங்கியதாக உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு மற்றும் அகில உலக கிறிஸ்தவ அமைப்புகளின் சம்மேளனம் போன்ற அமைப்புக்கள் உட்பட மேலும் பல தொண்டர் ஸ்தாபனங்களும் மேற்படி பாதையைத் திறந்து குடாநாட்டுக்கான அத்தியாவசிய பொருள்களின் விநியோகத்தை சீராக்கும் முயற்சியில் தீவிர அக்கறை காட்டி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக கடந்தசில நாட்க

(4ஆம் பக்கம் பார்க்க)

# பிரிட்டிஷ் தூதுவராக பிரெட்மன் வீரக்கோன்

(கொழும்பு)

ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரெட்மன் வீரக்கோன் இங்கிலாந்துக்கான உயர் ஸ்தானிகராக நியமனம் பெறவுள்ளார். இங்கிலாந்தில் உயர் ஸ்தானிகராகக் கடமையாற்றிய ஜெனரல் சேபால அட்டிக்கல எயர்லங்கா இயக்குநர் சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவர் நியமனம் பெறவுள்ளார்.

பிரெட்மன் வீரக்கோன் பிரதம மந்திரிகளின் செயலாளராக ஏழு தடவைகள் பணியாற்றியவர் என்பதும், 1989 முதல் காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் செயலாளராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஓரிரு தினங்களில் பிரெட்மன வீரக்கோன் புதிய பதவியைப் பொறுப்பேற்பார் என்று வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# குப்பி விளக்கில் அரச அதிபர் செயலகம்

[யாழ்ப்பாணம்)

குப்பிவிளக்கு வெளிச்சத்தில் யாழ். செயலகம் இயங்கி வருகிறது. இச் செயலகத்தில் உள்ள யாழ். அரசாங்க அதிபரின் அலுவலகம் உட்பட பல்வேறு அலுவலகங்களும் குப்பி விளக்கு வெளிச்சததிலேயே நீண்ட நாட்களாக இயங்கிவருகின்றன.

நேற்று திடீரென மப்பும் மந்தாரமும் காணப்பட்டதால் செயலகத்தின் பல அலுவலக மேசைகளில் குப்பி விளக்குகள் எரிந்துகொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இச் செயலகத்தின் மின்பிறப்பாக்கி பழுதடைந்து நீண்ட நாளாகிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# கூட்டுத்தாபன தலைவர்கள் பதவி விலகக் கோரிக்கை

(கொழும்பு)

அரச கூட்டுத்தாபனம் மற்றும் சபைகளின் தலைவர்களைப் பதவி விலகக்கோரும் கடிதங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இயக்குநர் சபைத் தலைவர் பதவிகளுக்குத் தகைமையுடையவர்களைத் தெரிவு செய்ய அமைச்சர்களுக்கு அதிக அதிகாரம் வழங்கும் நோக்கத்துடன் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

அரசின் அபிவிருத்தித் திட்டங்களைத் திறம்பட நிர்வகிக்கக் கூடிய அனுபவமும், கல்வித் தகைமை உடையவர்களையும் இயக்குநர் சபைத் தலைவர் பதவிகளுக்கு நியமிக்குமாறு ஜனாதிபதி அமைச்சர்களைப் பணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பல்கலை. வெற்றிடங்கள் விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகங்களிலுள்ள சில வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உதவிப் பதிவாளர், உதவிச் செயலாளர், உதவி நிதியாளர், உதவிக் கணக்காளர், உதவி உள்ளகக் கணக்காய்வாளர் ஆகிய பதவிகளுக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விண்ணப்பப்பத்திரங்களைக் கோரியுள்ளது. இப்பதவிகளுக்கான ஆரம்ப சம்பளம் 1 1 94 முதல் 5070 ரூபா எனவும் தெரிவிக்கப்படுகிறது. பட்டதாரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஏற்கனவே சேவையாற்றுபவர்களிடமிருந்தும் இவ்விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், இவர்கள் 35 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருத்

(4ஆம் பக்கம் பார்க்க)

# செஞ்சிலுவைப் பிரதிநிதி வைத்தியசாலை விஜயம்

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் புதிய யாழ். வதிவிடப் பிரதிநிதி இன்று யாழ் போதனா மருத்துவமனையை பார்வையிடவுள்ளார்.

அத்துடன் இவ் வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் வைத்திய அதிகாரிகளுடன் சந்திப்பு ஒன்றையும் மேற்கொள்ள உள்ளார்.

# தொலைக்கல்வி பயிற்சி அனைவரும் சித்தி

[யாழ்ப்பாணம்]

1992 ஏப்ரலில் நடைபெற்ற தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியின் இறுதிப்பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன.

யாழ். மாவட்டத்திலிருந்து இப் பரீட்சைக்கு தோற்றிய 45 பயிற்சி ஆசிரியர்களும் சித்தியடைந்துள்ளார்கள்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

[கொழும்பு]

பிரேமதாசா கொலை தொடர்பாக விசாரணை நடத்த அமைக்கப்பட்ட விசேட புலனாய்வுக் குழு தனது விசாரணை தொடர்பான விபரங்களை தினமும் பொலிஸ் மா அதிபருக்கு தெளிவுபடுத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மீட்புநிதி சேகரிக்கப்படவுள்ளது.

இதன்படி காலை 9.00 மணி முதல் 10.00 மணிவரை வலிகாமம் தீவக பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு உட்பட்டோர் நல்லூர்மங்கையர்க்கரசிமகாவித்தியாலயத்திலும், காலை 11.30 முதல் 12 30 வரை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு உட்பட்டோரும், சாவகச்சேரி பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவிற்கு உட்பட்டோர் சங்கத்தானை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் மாலை 3.00 மணிமுதல் 4.00 மணி வரையும் தமது மீட்பு நிதியைச் செலுத்தலாம் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் திரு. வெற்றியரசன் தெரிவித்துள்ளார்.

## எயர்லங்கா புதிய பணிப்பாளர் சபை

[கொழும்பு]

ஜெனரல் சேபால ஆட்டிக்கல தலைமையில் புதிய எயர்லங்கா பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளது. இச்சபையில் திறைசேரி செயலர் ஆர். பாஸ்கரலிங்கம், பிரதமரின்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவர் ராஜினாமா

[கொழும்பு]

பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் எல். கல்பகேபா தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டார். நேற்று முன்தினம் இவர் பதவியை ராஜினாமா செய்தார். ராஜினாமாவிற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

## சு. கவிலிருந்து நீக்கம்

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் களுத்துறை மாவட்ட சர்ச்சைக்குரிய எம். பியான திலக் கருணாரட்னவும், டாக்டர் நெவில் பெர்னான்டோவும் கட்சியிலிருந்து விலக்கப்படலாம் என கட்சிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தெரிதலில் தாக்கத்தை ஏற் டுள்ளது

# தென், வடமேல்மாகாண ஆட்சி ஐ. தே. கவிடம்

(கொழும்பு)

தென், வடமேல் மாகாண முதலமைச்சர்களாக ஐக்கிய தேசியக் கட்சியினர் பதவி ஏற்றுள்ளனர். இம் மாகாணங்களில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள போதும் எதிர்க்கட்சிகள் மொத்த ஆசனங்களைவிட குறைந்தளவு ஆசனங்களையே பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென் மாகாணசபை முதலமைச்சராக எம். எஸ். அமரசிறி நேற்று பதவி ஏற்றார். அவர் ஆளுநர் பாகீர்மார்க்கார் முன்னிலையில் காலியில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் மாகாண உள்ளூராட்சி, கல்வி, காணி அபிவிருத்தி, நிதியமைச்சுப் பொறுப்புகளையும் வகிப்பார்.

வடமேல் மாகாணசபை முதலமைச்சராக காமினி ஜெயவிக்ரம பெரேரா பதவி ஏற்றுக் கொண்டார்.

இதேசமயம் மத்திய, சப்பிரகமுவா, வடமத்திய மாகாணங்களுக்கான முதலமைச்சர்கள்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

தென், வடமேல் மாகாண சபைகளில்

# ஐ.தே.க. ஆட்சியமைத்தமை ஜனநாயக விரோதச்செயல்

(கொழும்பு)

சிறிமாவோ குற்றச்சாட்டு

தென் மாகாண சபை, வடமேல் மாகாணசபை என்பவற்றிற்கு ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சி அமைக்க மாநில ஆளுநர்கள் அழைத்தமை குறித்து எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சிறிலங்கா ஜனாதிபதி டி.பி விஜயதுங்கவிடம் அவர் தெரிவித்த ஆசேபனையில்;

இவ்வாறான நடவடிக்கைகள் தொடரக்கூடாது எனவும் மக்கள் ஜனநாயக வாழ்வை விரும்புகிறார்கள்; இவர்கள் மீது அழுத்தம் போடப்படுமானால் அதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள்முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து பெரும்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

குழப்பத்தை ஏற்படுத்தி

# மாகாணசபைகளை ஒழிக்க அரசு முயற்சி

[கொழும்பு]

மாகாணசபையில் குளறுபடிகளை ஏற்படுத்தி மாகாணசபை முறையை இல்லாதொழிக்க அரசாங்கம் முயல்கிறது என ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்

50 சதவீதத்திற்குமேல் ஆசனங்களைப் பெற்ற கட்சியை அல்லது கட்சிகளின் கூட்டணியை ஆட்சியமைக்குமாறு கோருவதே முறையென்றும் ஆனால் தெற்கு, வடமேல் மாகாணசபைகளில் அரசு அவ்வாறு நடந்துகொள்ளாமை மாகாணசபைகளில் குழப்பம் ஏற்படுத்தி மாகாணசபைகளை இல்லாதொழிப்பதே அரசின் நோக்கம் என அவர் விபரித்தார்.

நிலை தணிக்கப்பட்டு தேர்தல் அமைதியாக நடைபெற்றது. 72 சதவீதவாக்கு பதிவாகின. பதற்றம் ஏதும் நிலவவில்லை என்றும் அவதானிகள் குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் உள்ளது போல் விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலான சிக்கல் மிக்க விருப்பத்தெரிவு வாக்கெடுப்பு செல்லுபடியற்ற வாக்குகளின் எண்ணிக்கை

( 4 ஆம் பக்கம் பார்க்க )

தென், வடமேல் மாகாணங்களில்

# ஐ. தே. கவை ஆட்சியமைக்க அழைத்தமை தவறானது

(கொழும்பு)

தென்மாகாணம், வடமேல் மாகாணம் என்பனவற்றில் ஐக்கிய தேசியக் கட்சியினரை ஆட்சியமைக்க அழைத்தமை அரசியலமைப்புச் சட்டவிதிகளுக்கு முரணானது என கொழும்பு பல்கலைக்கழக அரசியல்துறை பேராசிரியர் றோகான் எதிரிசிங்க ஏ. எவ். பிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் இரண்டு இணைந்து தமக்கு பெரும்பான்மை இருப்பதால் ஆட்சி அமைக்க அனுமதிக்குமாறு மாகாணசபை ஆளுநரைக் கேட்டிருந்தும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியமைக்குமாறு ஆளுநர் கேட்டுக்கொண்டது இலங்கை அரசியல் அமைப்பில் ஆட்சி அமைப்பது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் விதிகளை மீறிய செயல் என்றும் எனவே இதனை அரசாங்கம் கருத்தில் கொண்டு செயல்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# யாரை அமைப்பது என்பது ஆளுநர்களின் வேலை

– டி. பி. விஜயதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

"மாகாணசபை ஆட்சியை அமைக்க யாரை அழைப்பது என்பது மாகாணசபையின் ஆளுநரைப்பொறுத்தவிடயம். அதற்கும் எனக்கும் எதுவித தொடர்பும் இல்லை" என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா, எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க நேற்று ஜனாதிபதியைச் சந்தித்தபோது இவ்வாறு தெரிவித்தார்.

மாகாணசபையை வழிநடத்துதல் அதன் அதிகாரங்கள் தொடர்பாக ஆளுநர்கள் நன்கு அறிவார்கள் என்றும் இது தொடர்பான அறிவுறுத்தல்கள் ஏற்கனவே அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அனைவருக்கும் ஒய்வூதியம் அரசிடம் திட்டம்

(கொழும்பு)

வெகுவிரைவில் வேலை பார்ப்போர், வேலை பார்க்காதோர் அனைவரையும் உள்ளடக்கக்கூடியதான தேசியஓய்வூதியத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெங்குக் கைத்தொழில் மற்றும் மாற்று பயிர்ச் செய்கைத் துறை அமைச்சர் திரு. இந்திரதாஸ ஹெட்டியாராய்ச்சி ஹொரணையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

இந்த ஒய்வூதியத் திட்டத்தின் நோக்கம் வயதானோரையும்அவர்களில்தங்கி இருப்போரையும் காப்பாற்றுவதாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். பெரும்பாலான இளைஞர்கள் அரசாங்கத்திலோ, கூட்டுத்தாபனத்திலோ அல்லது தனி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்

## துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது. விபரங்கட்கு வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா றோட், யாழ்ப்பாணம். [4923]

## றெனி மூக்குக் கண்ணாடியகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து கண்ணாடி வழங்கப்படும். இல. 288 நாவலர் வீதி (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (4918)

## தவறிவிட்டது

நாகலிங்கம் வைகுந்தவாசகம் என்பவரின் அடையாள அட்டை கடந்த 17-ம் திகதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு தெரியப்படுத்தவும். மொடேன் ஸ்ரோர்ஸ், நெல்லியடி, கரவெட்டி. [3431]

## டைனமோ (DYNAMO) தேவை

10K.V க்கும் 15K.V க்கும் இடைப்பட்ட நல்ல நிலையில் உள்ள தனி (DYNAMO) உடன் தேவை வைத்திருப்பவர்கள் கீழ்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். துரை மோட்டார் உயிரூட்டகம் பருத்தித்துறை வீதி கொடிகாமம். (சி/6670)

## விற்பனைக்கு

வீடியோ கமரா பாவித்தது M 7. புதியது பாவிக்காதது M.7 றீகல் வீடியோ கடற்கரை வீதி, ஈச்சமோட்டை யாழ்ப்பாணம். [சி/6671]

## O / L கணிதம்

அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுகிறது. சனி, ஞாயிறு 12 00 - 1.30 செவ். வியாழன் 5–6 PAPER CLASS ஆண்டு 6,7,8.9,10 வகுப்புகளும் நடைபெறுகின்றன. விபரங்கட்கு பா. கிருபாகரன் 327, நாவலர் வீதி [நாவலர் கலாகார மண்டபம் முன்பாக] யாழ்ப்பாணம். [4935]

## ஆயருக்கு வரவேற்பு

---

# பாலர் பாடசாலை ஆசிரியர் தேவை

பயிற்றப்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை தலைவர் கணபதி படிப்பகம் வல்வெட்டித்துறை என்ற விலாசத்திற்கு 27-05-93-ம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

(4934)

---

உ

# தசாக கிருகயக்ஞ அழைப்பிதழ்

அன்புடையீர்!

சென்ற 16 05-93 ஞாயிற்றுக்கிழமை தொல்புரம் மடத்துப் பிள்ளையார் கோவில், திருமதி தையல்நாயகி அம்மா தேவராஜக் குருக்கள் அவர்கள் சிவபதப்பிராப்தியடைந்து விட்டார்கள். அன்று மாலையே அன்னாரது ஈமக் கிரியைகள் நடைபெற்றது. எதிர்வரும் 24-05-93 திங்கட்கிழமை முதல் 28–05 93 வெள்ளிக்கிழமை வரையும் ஆத்ம சாந்திக் கிரியைகள் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், அன்பர்களுக்கு அறியத் தருகிறேன். தனிப்பட்ட அழைப்பு [illegible]யலாமைக்கு வருந்துகிறேன்.

இங்ஙனம்
சிவஸ்ரீ வி. இராமமூர்த்திக் குருக்கள்

தொல்புரம். (சி-6667)

---

# LONDON கணக்கியல் வகுப்புக்கள்

# I. A. B.

## FOUND & INTER

ஆரம்பம்: 24-05-1993

[C. I. M. A. STAGE 1 & A. A. T. INTER வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன]

விபரங்கட்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14 ST. PETER'S LANE,
JAFFNA.

(சி-6665)

---

குருநகர் சந்தை

# மாட்டிறைச்சிக் கடை இல.4

மேற்படி கடைக்கு யாழ். மாநகரசபை ஆணையாளரால் மீளக் கேள்வி கோரப்பட்டுள்ளது. இது தொடர்பான கேள்வி அறிவித்தல் அலுவலக விளம்பரப்பலகையில் இடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை யாழ் மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்,
1993. 05. 20 யாழ்ப்பாணம்.

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மகாபொல கொடுப்பனவு 5 ஆ. தவணைப் பணம்

பல்கலைக்கழக 2-ம் 3-ம், 4-ம் வருட மருத்துவ, கலை, விஞ்ஞான பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான 5ஆம் தவணைப்பண மகாபொல கொடுப்பனவுகளை 20-05-1993 முதல் வழங்க நிதிக்கிளையில் ஒழுகுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கொடுப்பனவு பற்றிய முழுவிபரங்களும், அறிவுறுத்தல்களும் பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன. இதற்கமைவாகக் கொடுப்பனவை உரித்துடைய மாணவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பதிவாளர்

(சி-6651)

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## பல்கலைக்கழக அனுமதிகள் 1992 / 93 ஆம் கல்வியாண்டு

பல் கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் பொருட்டு 1991 ஆகஸ்ட் / 1992 ஏப்பிரல் (விசேட) நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஆகக் குறைந்த தேவைகளைத் திருப்தி செய்துள்ள அபேட்சகர்களிடமிருந்து பல்கலை

---

# தீவுப்பகுதி பெறுபேறுகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

கிடைக்கப் பெறாத தீவுப் பகுதியைச் சேர்ந்த பாடசாலைகளின் க. பொ. த. (சா / தர) பரீட்சை-1992இற்கான பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

வேலணைக் கோட்டத்தைச் சேர்ந்த ஊர்காவற்றுறை, புங்குடுதீவு மற்றும் மண்டைதீவு கொத்தணிகளைச் சேர்ந்த சுமார் பதினைந்து பாடசாலைகளின் பெறுபேறுகளே கிடைக்கப் பெற்றுள்ளன.

மேற்படி பெறுபேறுகள் ஏற்கனவே தீவுப்பகுதிகளுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப் பட்டிருந்தனவாம் பின்னர் அங்கிருந்து திருகோணமலைக்கு திருப்பி அனுப்பிவைக்கப் பட்டிருந்தன

இதனைத் தொடர்ந்து யாழ். அரச அதிபரினால் "குமண" கப்பல் மூலம் இப் பெறு பேறுகள் இங்கு எடுத்து வரப்பட்டன.

மேலும் இப் பெறுபேறுகள் நேற்றே யாழ். கல்வித்திணைக் களத்திடம் ஒப்படைக்கப்பட்டு அன்றே உரிய பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. (பா)

# கால்நடைகள் வளர்ப்போருக்கான பயிற்சி வகுப்பு

கால் நடை வளர்ப்போருக்கான பயிற்சி நெறியொன்றினை எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை நடாத்துவதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

இந்தப் பயிற்சி நெறி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக யாழ் மாவட்டச் செயலகத்தில் இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

கால்நடைப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புவோர் தங்களது பெயர் விபரங்களை இன்று யாழ். மாவட்டச் செயலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.

# சனசமூக நிலையங்கள் இணைந்தன

பாஷையூரில் இயங்கி வரும் இரண்டு சனசமூக நிலையங்களான பாஷையூர் புனித அந்தோனியார் சனசமூக நிலையமும், பாஷையூர் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலையமும் கடந்த சனிக்கிழமை ஒன்றாக ஒரு பெயரின் கீழ் இணைந்துள்ளதாக தெரிவிக்

---

# வீட்டு வளவுகளிலேயே புதைக்கப்படும் சடலங்கள்

## இளவாலையிலிருந்து திரும்பியவர் தகவல்

இளவாலைப் பகுதியில் உள்ள வீடுகள் யாவும் மனித சடலங்களைப் புதைக்கின்ற மயானமாக மாறி வருகிறது. வீடுகளில் இறக்கின்ற மனித சடலங்களை பல நாட்களுக்குப்பின் கண்டெடுக்கப்பட்டு அந்தந்த வீட்டு நிலத்திலேயே புதைக்கப்படுகின்றன.

இவ்வாறு இளவாலையில் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில்சிக்குண்டு ஒன்பது மாதங்களாக தடுத்துவைக்கப் பட்டு நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட லூ[illegible]ஸ்மேரி றெஜினா (வயது 40) தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது; அங்குள்ள ஒவ்வொரு வீடுகளிலும் ஒவ்வொரு வயோதிபர் தங்கி வருகின்றனர். இவர்கள் நோயாளிகள். போதிய மருத்துவ வசதிகள் இல்லாத நிலையில் இறக்க நேரிடுகின்றனர். இறந்த இவர்களது உடல்கள் பல நாட்களுக்குப் பின்னரே கண்டெடுக்கப்பட்டு சிதைந்துபோன உடலை அங்குள்ள நாங்களே புதைக்க நேரிடுகிறது. இவர்களது இறப்புகள் பற்றி உறவினர்களுக்கு தெரியப்படுத்துவதில்லை இவர்களுக்கு சமய முறையிலான மரணச் சடங்குகளும் கிடையாது.

அங்குள்ள வீடுகள் எங்கும் ஒரே துர்நாற்றங்கள். இப்பகுதி எங்கும் மயான அமைதி காணப்படுவதோடு, வெறிச்சோடிக் கிடக்கிறது. இப்பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு வெளியுலகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் சேர்க்கப்படுகின்ற கடிதம் ஆறு மாதங்களுக்குப் பின்புதான இளவாலைக்கு வந்து சேர்கிறது. எப்பொழுதாவது அங்கு வரும் சிங்கள டாக்டரிடம் பாஷைப் பிரச்சினை காரணமாக எமக்குரிய நோயையும் தெரிவிக்க முடியவில்லை. நோய்க்குரிய மருந்தையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதனாலேயே நோயாளிகள் குணமடைய முடியாமல் நோயின் வேகம் அதிகரிக்கிறது.

ஒன்பது மாதங்களாக பிள்ளையை பிரிந்திருந்த நான் யாழ்ப்பாணத்தில் பிள்ளையைப் பார்ப்பதற்காக பல தடவைகள் இராணுவத்திடம் அனுமதி கேட்டும் இராணுவம் அனுமதி மறுத்து வந்தது. ஆனாலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலம் எனது பிள்ளையின் சுகத்தை அறிந்து கொள்வேன்.

இன்றுதான் எனது பிள்ளையை பார்க்கின்ற வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இளவாலைப் பகுதியில் பத்துக்கு மேற்பட்டோர் வீடுகளில அடையாளம் காணமுடியாமல் இறந்துள்ளனர் இன்னமும் அங்கே மிகச் சொற்பமானவர்களே இருக்கின்றனர். அவர்களும் யாழ்ப்பாணம் வரத்தவிக்கின்றனர் என்றார். (யோ)

# 'காலக்குயில்' நூல் வெளியீடு

எழுத்தாளர் மானிலாவின் 'காலக் குயில்' என்கின்ற கவிதை நூலின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மாலை நான்கு மணியளவில் நாவலர் கல சாரமண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நூல் வெளியீட்டு விழாவில் பல அறிஞர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். (தி)

---

மூகாவில் – இயக்கச்சி

# அம்பலவாணர்பர்வபத்தினி அம்மன் தேவஸ்தானம்

(திரியாய் அம்மன்)

எதிர்வரும் 4. 6. 93 தமிழ் வைகாசி 22ஆம் நாள் வருடாந்த பொங்கல் திருக்குளிர்ச்சி.

அன்று பகல் அபிஷேக அன்னதான ஆராதனைகளும், நேர்த்திக்கடன் காவடி, பாற்செம்பு போன்ற நிகழ்சிகளும் நடைபெறும்.

## இரவு நிகழ்ச்சிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

அன்றைய நெருக்கடியை குறைப்பதற்காக எட்டாம் மடையன்றும் (11. 6. 93) பகல் காவடி, பாற்செம்பு

வும். துரை மோட்டார் உரி ருட்டகம் பருத்தித்துறை வீதி கொடிகாமம். (சி/6670)

## விற்பனைக்கு

வீடியோ கமரா பாவித்தது M 7. புதியது பா விக் காதது M.7 றீகல் வீ டியோ கடற் கரை வீதி, ஈ ச் ச மோ ட்டை யாழ்ப்பாணம். [சி/6671]

## 0 / L கணிதம்

அ டிப் படையிலிருந்து கற் பிக்கப்படுகிறது. சனி, ஞாயிறு 12 00 - 1.30 செவ். வியாழன் 5-6 PAPER CLASS ஆண்டு 6,7,8.9,10 வ கு ப் பு க ளு ம் நடைபெறுகின்றன. விபரங் கட்கு பா. கிருபாகரன் 327, நாவலர் வீதி [நாவலர் கலா கார மண்டபம் மு ன் பா க] யாழ்ப்பாணம். [4935]

## ஆயருக்கு வரவேற்பு

(வடமராட்சி)

யாழ். மறை மாவட்ட ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை அ வ ர் கள் இ ன் று சனிக்கிழமை பருத்தித்துறை புனிததோமஸ் ஆலயத்திற்கு அழைத்து வரப் படுவர்

நாலாம் குறுக்குத்தெரு அந் தோனியார் ஆலய வாசலில் வ ர வே ற் க ப் ப ட் டு புனித தோமஸ் ஆலயத்திற்கு பிற்ப கல் 4. 30 மணியளவில் அழை த்து வரப்படுவார் இன்று 400 பிள்ளைகளுக்கு உறுதிபூசல் எனும் திருவருட் சாதனமும் வழங்குவார்.

மறுநாள் கலட்டி றோ. க. ஆண்கள் பாடசாலை மைதா னத்தில் பங்குத்தந்தை நேச நாயகம் அடிகளின் தலைமை யில் பங்கு மக்களால் பொது வரவேற்பும் நடைபெறும். (யோ)

## கூட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி வட்டப் பிரதே சத்தில் உள்ள உழவு இயந்திர உரிமையாளருக்கான முக்கிய கூ ட் ட ம் ஒ ன் று நா ளை ஞாயிறு பி. ப. 2.30 மணிக்கு யா/ சாவகச்சேரி றிபேக் கல் லூரியில் இடம்பெறும்.

எனவே மே ற் ப டி பகுதி உழவு இயந்திர உரிமையாளர் கள் தவறாது சமுகம் தரும்படி சாவகச்சேரி வட்டப் பொறுப் பாளர் திரு. தமிழன் கேட்டுள் ளார். (86)

## வருடாந்த உற்சவம்

(தொல்புரம்)

தொல்புரம் கொட்டடியம் பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்து மாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்ச வம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி அலங்கார உற்ச வத்தினைத் தொடர்ந்து 31 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், யூன் முத லாம் திகதி செவ்வாய் அன்று காலை தீர்த்தோ ற் ச வ மு ம் நடைபெறும். (41)

---

[C. I. M. A. STAGE I & A. A. T. INTER

வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன]

விபரங்கட்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

**14 ST. PETER'S LANE,**

**JAFFNA.**

(சி-6665)

---

குருநகர் சந்தை

## மாட்டிறைச்சிக் கடை இல.4

மேற்படி கடைக்கு யாழ். மாநகரசபை ஆணையாள ரால் மீளக் கேள்வி கோரப்பட்டுள்ளது. இது தொடர் பான கேள்வி அறிவித்தல் அலுவலக விளம்பரப்பலகை யில் இடப்பட்டுள்ளது. மே ல தி க விபரங்களை யாழ் மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மா நகர ஆணையாளர்,

யாழ்ப்பாணம்.

1993 05. 20

(சி/6664)

---

## அரசாங்க அறிவித்தல்

சுகாதாரத் திணைக்களம் – யாழ்ப்பாணம்

மார்பு நோய் சிகிச்சை நிலையம்

## இடமாற்றம்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி, 51-ம் இலக்க கட்டிடத்தில் அமைந்திருந்த மார்பு நோய் சிகிச்சை நிலையம இல. 16, மணிக் கூட்டு வீதி என்ற முகவரிக்கு இடமாற்றப் பட்டுள்ளதை பொது மக்களுக்கு அறியத் தருகிறேன்.

வைத்தியகலாநிதி பொ. இரத்தினசபாபதி

பிராந்திய பணிப்பாளர்,

20-05-93.

(சி-6661)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

## இராயப்பு குருசுமுத்து

மண்ணில் 17- 12- 1909

விண்ணில் 28- 4- 1993

பல்லாண்டு காலம்
பாசமாய் வளர்த்து வந்தாய் - எம்மை
பரிதவிக்க விட்டு
பறந்தோடிச் சென்றுவிட்டாய்
வல்லபரன் இறைவனிடம்
நல்லாசி பெற்றிடவே
கண்ணீர் மல்க இரு கரங்கூப்பி வேண்டுகிறோம்.

இராயப்பு குருசுமுத்துவின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட சங் குருக்கள், கன்னியர் மற்றும் அன் பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த நன்றியைத் தெரி விக்கிறோம். இவரின் ஆன்ம இ ளைப் பாற் றி க் கா க 22. 05. 93இன்று சனிக்கிழமை காலை11மணிக்கு நவாலி புனித இராயப்பர், சின்னப்பர் ஆலயத்தில் தி ருப் ப லி ஒப்புக் கொடுக்கப்படும். இப் பலியில் பங்கு கொள்ளுமாறு குருக்கள் கன்னியரை அன்புடன் அழைககின்றோம்.

சிஸ் றொசிற்றா

தவம் குருசுமுத்து

(சி-6666)

---

யாழ்ப்பாணப்

பல்கலைக்கழகம்

இலங்கை

## பல்கலைக்கழக அனுமதிகள் 1992 / 93 ஆம் கல்வியாண்டு

ப ல் கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் பொருட்டு 1991 ஆகஸ்ட் / 1992 ஏப் பிரல் (வி சே ட) நடை பெற்ற க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் ஆகக் குறைந்த தே வை க ளைத் திருப்தி செய்துள்ள அபேட் சகர்களிடமிருந்து பல்கலை க்கழக மா னி ய ங் க ள் ஆணைக்குழு விண்ணப்பங் களைக் கோருகின்றது.

ஒவ்வொரு விண்ணப்ப தாரியும் ரூபா 50/- இனை யாழ். பல்கலைக்கழக நிதி யாளர் அ லு வ ல க த்தில் செலுத்திப் பெற்றுக் கொ ண்ட ப ற் று ச் சீட்டினை யாழ். ப ல் க லை க் க ழ க தேர்வுகளும் அனுமதிகளும் கிளையில ச ம ர் ப் பி த் து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களை யாழ். பல்கலைக்கழக தேர் வுகளும் அ னு ம தி க ளு ம் கிளையிலிருந்து கலை, வர்த் தக மாணவர்கள் மே 24-ம் திகதியும், கணித, விஞ் ஞான மாணவர்கள் மே 25-ம் திகதியும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களை மாணவர்கள் த ங் க ள து பரீட்சைப் பெ று பே று, மொத்தப்புள்ளி, தே சி ய அடையாள அட்டை ஆகிய ஆவணங்களுடன் நே ர டி யாக வந்து பெற்றுக்கொள் ளவும்.

அனுமதி விதிகள் பற்றிய கைநூல்கள் பா ட சா லை அதிபர்களுக்கு அ னுப் பப் பட்டுள்ளன. மாணவர்கள் தத்தம் பாடசாலைகளில் அக் கை நூல்களைப் பார் வையிடலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 10-06-93. பூர்த்தி செ ய் ய ப் ப ட் ட படிவங்கள் முடிவுத் திகதி க்கு முன்பாக, யாழ் பல் கலைக்கழக ப ரீ ட் சை க் கிளையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

பதிவாளர்

(சி/6660)

---

இந்தப் பயிற்சி நெறி தமி ழீழ பொருண்மிய மேம்பாட் டுக் க ழ க யாழ் மாவட்டச் செயலகத்தில் இ ல வ ச மா க நடாத்தப்படவுள்ளது.

கால்நடைப் ப யி ற் சி நெறி யில் கலந்து கொள்ள விரும்பு வோர் தங்களது பெ ய ர் விபரங்களை இன்று யாழ். மா வ ட் ட ச் செயலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ள னர்.

## சனசமூக நிலையங்கள் இணைந்தன

பாஷையூரில் இயங்கி வரும் இரண்டு சனசமூக நிலையங்க ளான பாஷையூர் புனித அந் தோனியார் சனசமூக நிலைய மும், பாஷையூர் மக்கள் முன் னேற்ற சனசமூக நிலையமும் க ட ந் த ச னி க் கி ழ மை ஒன்றாக ஒரு பெயரின் கீழ் இணைந்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

இ வ் வி ர ண் டு சனசமூக நிலையங்களும் இ ணை ந் து பாஷையூர் புனித அந்தோனி யார் மக்கள் முன்னேற்ற சன சமூக நிலையம் என்ற பெயரி லேயே இ னி மே ல் இயங்கும் எனவும் இரண்டு ச ன ச மூ க நிலையங்களுக்கும் ஓரே செயற் குழுவே இருக்கும் எ ன வு ம் தெரிவிக்கப் படுகிறது. (17)

## அரச ஊழியருக்கு நட்டஈடு இல்லை

(யாழ்ப்பாணம்)

இரா ணுவ நடவடிக்கையால் பாதிப்படைந்த சேதத்திற்குள் ள ா ன அரசாங்க ஊழியர்க ளின் வீடுகளுக்கான நட்டஈட் டுக்கொடுப்பனவு கொ டுப்ப தில்லையென பு ன ர் வா ழ்வு புனர்நிர்மாண அமைச்சு அறி வித்துள்ளது.

கடந்தகால இராணுவ நட வடிக்கையின்போது அரசாங்க ஊழியர்கள் பலரின் வீடுகளும் தரைமட்டமானதும் பெரும் சேதத்திற்கு உ ள் ள ா னதும் தெரிந்ததே இவர்கள் தமக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டு மென வி ண்ணப்பித்திருந்தார் கள் இதே வேளை அரச அலு வலர்களின் வீடுகள் சேதத்திற் கான நட்டஈடுகள் கொடுப்ப தில்லையென பு ன ர் வாழ்வு புனர் நிர்மாண அமைச்சு அறி வித்துள்ளது. (சி)

## வித்தியானந்தன் நினைவுப் பேருரை

யாழ். பல்கலைக்கழக முன் னாள் துணைவேந்தர் பேரா சிரியர் வி த் தி யா னந்தன் நினைவுப் பேருரை எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை பிற் பகல் 3. 30 மணியளவில் பல்க லைக்கழக கைலாசபதி கலைய ரங்கில்இடம்பெறும் "தமிழில் வழங்கும்எழுத்துப் பெயர்ப்பு முறைகள்" என்னும்பொருளில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் இ. முருகையன் உரைநிகழ்த்த வுள்ளார்.

---

பின்புதான் இளவர் லைக்கு கொண்டு உரையாற்றுவார் வந்து சேர்கிறது. எப்பொழு கள். (தி)

---

முகாவில் – இயக்கச்சி

## அம்பலவாணர்பர்வபத்தினி அம்மன் தேவஸ்தானம்

(திரியாய் அம்மன்)

எதிர்வரும் 4. 6. 93 தமிழ் வைகாசி 22ஆம் நாள் வருடாந்த பொங்கல் திருக்குளிர்ச்சி.

அன்று பகல் அபிஷேக அன்னதான ஆ ர ா த னை களும், நேர்த்திக்கடன் காவடி, பாற்செம்பு போன்ற நிகழ்சிகளும் நடைபெறும்.

இரவு நிகழ்ச்சிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

அன்றைய நெருக்கடியை குறைப்பதற்காக எட்டாம் மடையன்றும் (11. 6. 93) பகல் காவடி, பாற்செம்பு போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு நிர்வாகம் ஒழுங்கு செய்துள்ளது.

- நிர்வாகம்

(4933)

---

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-22

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா-தாண்டிக்குளம் பகுதியிலிருந்து சிறிலங்கா இராணுவத் தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப் பட்ட மன்னார்-மடுவைச்சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1988 ஆம் ஆண்டு யாழ்-கந்தரோடையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது விழுப்புண் அடைந்த நிலையில் தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய,

லெப்.எட்றிச்/வெள்ளை (சுந்தரம் கனகசுந்தரலிங் கம்-வெள்ளைவீதி, சுன்னாகம் தெற்கு-யாழ்)

1989 ஆம் ஆண்டு மணலாறு-நெடுகேணி ஆயிலடிப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

அகிலன் (சுப்பிரமணியம் நாகேந்திரன்-ஆயிலடி, நெடுங்கேணி-மணலாறு)

யாழ்-மந்துவில் பகுதியில் இந்தியப்படையினர் மேற் கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட் கொண்டு வீரச்சாவெய்திய,

பைக்பைக்/செந்தில் (கனகரத்தினம் சிறிகாந்தன்-பெருங்குளம். பிள்ளையார் கோயில், சாவகச்சேரி-யாழ்)

யாழ்-கரவெட்டி, கப்புது வெளிப்பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய் திய,

வள்ளுவன் [தம்பு ரதிநாதன்-மத்தொனி, கரவெட்டி-யாழ்]

அருள் [யாக்கோப் பெஞ்சமின் வில்லியம் ஜீவஅருள் தாஸ்-உச்சில் ஒழுங்கை, கரவெட்டி-யாழ்]

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6663)

சிந்தனைக்கு

தலையணையை மாற்றுவதால் தலையிடி தீர்ந்து விடப் போவதில்லை.

தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## சிறிலங்காவின் அரசியலமைப்பு மாற்றம்?

லண்டனில் உள்ள புத்தகக் கடை ஒன்றிற்கு சென்ற ஒருவர், ''சிறிலங்காவின் அரசியல் யாப்பு ஒன்று தருமாறு கோரினாராம். அதற்கு, இங்கு சஞ்சிகைகள் விற்கப்படுவதில்லை எனப் புத்தகக் கடையில் நின்றவர் கூறினாராம்.'' இவ்வாறாக சிறிலங்கா அரசியல் யாப்பு குறித்துக் கிண்டல் செய்யப்படுவதுண்டு அந்தளவிற்கு சிறிலங்காவின் அரசியல் யாப்பின் நிலையாமை குறித்துக் குறிப்பிடப்படுவதுண்டு. இந்நிலையில், சிறிலங்காவின் புதிய ஜனாதிபதியும் அரசியலமைப்பு குறித்து விசேட கவனம் செலுத்துவதாகத் தெரிகின்றது. இதனை வெளிக்காட்டுவது போல், அரசியல் யாப்பிற்கென புதிய அமைச்சு ஒன்று அமைக்கப்பட்டுள்ளமையும், அதற்கு ஓர் அனுபவம் மிக்க சட்டத்தரணியும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றி மீண்டும் பாராளுமன்ற ஆட்சி முறையை ஏற்படுத்துவது குறித்தும் ஜனாதிபதி விஜயதுங்கா தீவிரமாகப் பரிசீலித்து வருவதாக அறிய முடிகின்றது. இவ்வாறாக, அரசியல் யாப்பில் மாற்றங்களை ஏற்படுத்த ஜனாதிபதி முற்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இதில், நிறைவேற்று ஜனாதிபதியிடம் அதிகாரங்கள் வரம்பின்றி குவிந்து போய் உள்ளதாக அவர் எண்ணலாம் அல்லது எதிர்க்கட்சியினரின் கோரிக்கைகளை மனப்பூர்வமாகப் பரிசீலிக்கத் தயாராகவும் இருக்கலாம்.

ஆனால் உண்மையில் பிரச்சினை ஜனாதிபதி ஆட்சிமுறை எந்தளவிற்கு நன்மையானது, தீமையானது என்பதல்ல. ஜனாதிபதி ஆட்சி முறை ஒருவருக்கு அதிகாரத்தை வழங்கிவிட்டு ஏனையவர்களைப் பொம்மை ஆக்கியுள்ளமையும், ஜனாதிபதி ஆட்சிமுறையில் எப்பொழுதுமே அப்பதவியைக் கைப்பற்றமுடியாது என்ற எதிர்க்கட்சிகளின் ஆதங்கமுமே முக்கிய காரணமாகும். அதாவது ஜனாதிபதி ஆட்சிமுறையானது எதிரணியினருக்கு மட்டுமல்ல, அரசாங்கத்தைச்சேர்ந்த ஜனாதிபதி தவிர்ந்த ஏனையோர் உரிமைகளையும், அதிகாரங்களையும் வெகுவாகப்பாதிக்கின்றதுஎன்பதே

எடுத்துக்காட்டாக, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை இல்லாவிட்டால் இந்திய-சிறிலங்கா சமாதானஉடன்படிக்கை

### அநுராதபுரம் மீரிகம பகுதிகளில்

# இராணுவம் அட்டகாசம்; பொலிசார் துப்பாக்கிச் சூடு

## ஒருவர் பலி; பலர் காயம்: கடைகளும் தீக்கிரை

[அநுராதபுரம்]

அநுராதபுரம், மீரிகம பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்குமிடையில் இடம்பெற்ற மோதல்களில் ஒருவர் பலியானதுடன் 15 பேர் காயமடைந்தனர். பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டினால் இராணுவச் சிப்பாய் ஒருவரும் காயமடைந்தார்.

கடந்த வியாழன் மீரிகமவில் பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே ஏற்பட்ட கலரத்தை அடக்குதற்கு மீரிகம பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது ஜெயக்கொடி என்ற இராணுவச் சிப்பாய் காயமடைந்தார்.

வெசாக் அலங்காரங்களைப் பார்வையிட்ட அம்பேபுஸ்ஸ இராணுவமுகாம் இராணுவத்தினருக்கும் அப்பகுதி வர்த்தகர்களுக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதமே கலவரமாக உருவெடுத்தது என பொலிசார் தெரிவித்தனர். இது தொடர்பாக 3 இராணுவத்தினர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபின் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். பிணையில் சென்ற இராணுவத்தினர் தமது சக இராணுவத்தினருடன் மீரிகம பகுதிக்குச் சென்று கடைகளுக்கு தீவைத்ததுடன் வர்த்தகர்களையும் தாக்கியுள்ளனர். இதன்போது அங்கு சென்ற பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இது இவ்வாறிருக்க அநுராதபுரம் பஸ் நிலையத்திற்கு வியாழன் இரவு 2 இராணுவ சிப்பாய்கள் சென்று அங்குள்ள வியாபாரிகளிடம் துர்நோக்கத்துடன் பெண்கள் குறித்து விசாரித்தபோது அதற்கு வியாபாரிகள் ஒன்றுசேர்ந்து அவர்களை நையப்புடைத்தனராம். அங்கிருந்து தப்பிஓடிய இராணுவத்தினர் சிறிதுநேரத்தில் சக இராணுவத்தினருடன் மீண்டும் அப்பகுதிக்குச்சென்று கடைகளை சேதப்படுத்தியதுடன் வியாபாரிகள் மீது தாக்குதலையும் நடாத்தினர். இதன் போது கிறிஸ்டி லியோனட் பெர்னாண்டோ என்ற வியாபாரி கொல்லப்பட்டதுடன் 15 பேர் காயமடைந்ததாக பொலிஸ் தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது.

காயமடைந்த அனைவரும் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## திருமதி சிறிமாணி லலித் மே. மாகாணத்தில் நியமனம்?

[கொழும்பு]

கொல்லப்பட்ட ஜ. ஐ. தே. மு. தலைவர் லலித் அத்துலத்முதலியின் மனைவி திருமதி சிறிமாணி அத்துலத் முதலி அரசியலில் பிரவேசித்துள்ளார். பிரதித் தலைவர் காமினி திஸ்ஸ நாயக்காவின் கொழும்பு வீட்டில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் திருமதி சிறிமாணி இதை அறிவித்தார்.

எனது கணவரின் அபிலாசைகளை நிறைவேற்றும் நோக்குடன் நான் அவரின் பாதையில் பிரவேசித்துள்ளேன் என அவர் கூறினார். இச்செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட கலாநிதி விக்ரமவீரசூரிய தகவல் தருகையில், மாகாண சபைத் தேர்தலில் தெரிவான எமது கட்சி உறுப்பினர் ஒருவர் பதவியை ராஜினாமாச் செய்தால் அவரின் இடத்திற்குத் திருமதி அத்துலத் முதலி நியமிக்கப்படுவார். இதற்கு கட்சிக்கு அதிகாரம் உண்டு எனக் குறிப்பிட்டார். இதற்காக எமது கட்சி உறுப்பினர்கள் பலர் தமது பதவியை ராஜினாமாச் செய்து விட்டுக் கொடுக்க முன்வந்துள்ளதாகவும் வீரசூரிய தெரிவித்தார்.

திருமதி அத்துலத் முதலி மேல் மாகாண சபை உறுப்பினராக வருவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

### மாலை ஆறுமணிக்குப் பின்

## மட்டக்களப்பில் நடமாட படையினர் கட்டுப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிற்கு அண்மையாக உள்ள கிராமங்களில் அமைந்துள்ள சோதனை நிலையங்களில் உள்ள படையினர் மாலை 6 மணியுடன் வீதிப்போக்குவரத்தை தடைசெய்கின்றனர். மட்டக்களப்பு நகரினுள் கண்டபடி எவரும் பிரவேசிப்பதை தடுக்கவே இந்நடவடிக்கை எனத் தெரிவிக்கப்பட்டது.

நகரினுள்ளும் பொலிசாரின் திடீர் சுற்றி வளைப்பும் தேடுதல்களும் நடைபெறுகின்றன. அண்மையில் நகரினுள் குண்டு வைக்கப்பட்ட பொதி ஒன்று அநாதரவான நிலையில் காணப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

## போட்டி

மட்டுவில் கொத்தணி மட்டப் பாடசாலைகளின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி 24.5.93 திங்கட்கிழமை பி.ப. 2மணிக்கு மூலாதாரப் பாடசாலையான யா. மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் கொத்தணி அதிபர் திரு. அ. பொ. செல்லையா தலைமையில் இடம்பெறும். [86]

## கட்டாய ஓய்வில்

(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சுங்கப் பணிப்பாளர் நாயகம் பீ. வீரசேகர அரசியல் காரணமாக முன்னர் சுங்க திணைக்களத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட

## பிரேமா கொலையை அருந்து பட்டாசு கொளுத்தினராம்

### மாத்தளையில் அறுவர்கைது

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா ...

தாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

## நடமாடும் செயலகம் விரைவில் கலைக்கப்படும்

(கொழும்பு)

ஜனாதிபதி நடமாடும் செயலகம் அடுத்த மாதம் கலைக்கப்பட்டு செயலகத்தின் அலுவலகம் பிரதமரின் அலுவலகமாக மாற்றப்படவுள்ளது. தற்போது பிரதமரின் அலுவலகம் அவரின் ''ரெம்பிள் ரீஸ்'' உத்தியோகபூர்வ இல்லத்திலேயே அமைந்துள்ளது தெரிந்ததே.

கலைக்கப்படவுள்ள நடமாடும் ஜனாதிபதி செயலகம் ஃபுளவர் வீதியில் அமைந்துள்ளது. இதேவேளை பிரேமதாசாவின் தாபரிப்பு பெற்றோர் திட்டம் குறித்து பாராளுமன்றத்தில் பொருத்தமான சட்டம் கொண்டுவரப்பட்டு சட்டபூர்வமான அங்கீகாரம் பெறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் தாபரிப்பு பெற்றோர் திட்டம் சட்டப்பூர்வ நிதியமானதும் அது பிரதமர் அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

கொள்கைத் திட்டமிடல் அமைச்சின்கீழ் தற்போது இயங்கிவரும் கிராமோதய மண்டல பொதுநிர்வாக உள்நாட்டமைச்சிற்கு உடனடியாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி நடமாடும் செயலகம், செவனசரன தாபரிப்பு பெற்றோர் திட்டம், கிராமோதய மண்டல என்பவை மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவினால் அமுலாக்கப்பட்ட திட்டங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரேமா கொலை விசாரணை அதிகாரிகளிடையே இழுபறி

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா ஆமர் வீதியில் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட இடத்தை விசாரணையாளர்கள் ஸ்தலத்திற்கு வரமுன்பே துப்புரவு செய்து அப்பகுதியில் எதுவுமே நடைபெறாததைப் போன்று ஆக்கிவிட்டமை குறித்து சி.ஐ.டியினருக்கும் குற்ற புலனாய்வு பணியகத்திற்கும் (சி.டி.பி) இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் குற்ற புலனாய்வு பணியகத்தினர் (சி.டி பி) தாம் மேலிடத்து உத்தரவையே பின்பற்றியதாகக் கூறுகின்றனர் மக்கள் இரத்தத்தையும் அழிவையும் கண்டால் பீதியடைந்துவிடுவார்கள் என அவர்கள் கூறுகின்றனர்.

சம்பவம் நடைபெற்றால் விசாரணை முடிவடையும் வரை அப்பகுதியை அப்படியே வைத்திருப்பதே உலகம் முழுவதும் பேணப்படும் நடைமுறையாகும் ஆனால் சி.டி.பியினர் வேறுவிதமாக நடந்து கொண்டுள்ளனர். முக்கியமான தடயங்கள் இடம் முழுமையாக 'சுத்தமாக்கப்பட்டு' விட்டதால் கண்டுபிடிக்கமுடியவில்லை என சி. ஐ. டி. அதிகாரிகள் கூறினர்.

## மின்சார விநியோகம் மின்சார சபையிடம்

[கொழும்பு]

இலங்கை மின்சாரசபை வடக்கு, கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளூராட்சி சபைகளால் இதுவரை நிர்வகிக்கப்பட்டு வந்த மின் விநியோக வேலைகளை பொறுப்பேற்க உள்ளது உள்ளூராட்சி சபைகளின் கீழ் இவ்வேலைகள் இருந்த போது பல குறைபாடுகள் காணப்பட்டமையே இவற்றை மின்சார சபை பொறுப்பேற்பதற்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைகளிடமிருந்து இவ்வேலைகளைப் பொறுப்பேற்பதன்மூலம் பாவனையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியும் என்றும் மின்சாரசபை மேலும் கூறியுள்ளது. உலக வங்கியின் உதவியுடன் மின்சார சபை தனது வேலைகளை அபிவிருத்தி செய்யவுள்ளது என்பதும், பாவனையாளர் களிடமிருந்து பெறப்படவேண்டிய நிலுவையை அறவிடுவதற்கு மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது என்பதும், குறிப்பிடத்தக்கதாகும்.

## மாகாணசபை உறுப்பினராக மலையகத்தில் 18 தமிழர்கள்

மலையகத்தில் இம்முறை மாகாணசபை தேர்தல் மூலம் 18தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நுவரெலியா மாவட்டத்தில் 10 தமிழர்களும், கண்டி மாவட்டத்தில் 3 ... ரும் சப்பிரகமுவா மாகாணத்தில் இருவருமாக 13 தமிழர்களே உறுப்பினர்களாக இடம்பெற்றிருந்தனர். என்பது குறிப்பிடத்தக்கது.

பதி முற்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இதில், நிறைவேற்று ஜனாதிபதியிடம் அதிகாரங்கள் வரம்பின்றி குவிந்து போய் உள்ளதாக அவர் எண்ணலாம் அல்லது எதிர்க்கட்சியினரின் கோரிக்கைகளை மனப்பூர்வமாகப் பரிசீலிக்கத் தயாராகவும் இருக்கலாம்.

ஆனால் உண்மையில் பிரச்சினை ஜனாதிபதி ஆட்சிமுறை எந்தளவிற்கு நன்மையானது, தீமையானது என்பதல்ல. ஜனாதிபதி ஆட்சி முறை ஒருவருக்கு அதிகாரத்தை வழங்கிவிட்டு ஏனையவர்களைப் பொம்மை ஆக்கியுள்ளமையும், ஜனாதிபதி ஆட்சிமுறையில் எப்பொழுதுமே அப்பதவியைக் கைப்பற்றமுடியாது என்ற எதிர்க்கட்சிகளின் ஆதங்கமுமே முக்கியகாரணமாகும். அதாவது ஜனாதிபதி ஆட்சிமுறையானது எதிரணியினருக்கு மட்டுமல்ல, அரசாங்கத்தைச்சேர்ந்த ஜனாதிபதி தவிர்ந்த ஏனையோர் உரிமைகளையும், அதிகாரங்களையும் வெகுவாகப்பாதிக்கின்றதுஎன்பதே.

எடுத்துக்காட்டாக, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை இல்லாவிட்டால் இந்திய-சிறிலங்கா சமாதானஉடன்படிக்கை ஒன்று ஏற்பட்டு இருக்குமா என்பதும், கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பியினரை இரகசியப்படை ஒன்றின் மூலம் கொன்றொழிக்க முடிந்திருக்குமா என்பதும் கேள்விக்குரியதே.

இந்நிலையில், பாராளுமன்ற ஆட்சி முறை அமுலாக்கப்படுவது என்பது அமைச்சரவை நாட்டின் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது ஆகும். இதுவே இரண்டாம் நிலையில் அதிகாரத்திலுள்ளவர்களும், அதிகாரத்திற்கு வரத்துடிக்கும் அரசியல்வாதிகளும் விரும்புவதாகும்.

ஆனால், இம்மாற்றம் கொண்டு வரப்படுமானால். தென்னிலங்கையிலுள்ள அரசியல் நெருக்கடிகள் குறையலாம் என்றோ அன்றி எதிரணிகள் அரசிற்கெதிராகக் கொடுக்கும் நெருக்கடிகள் தீர்ந்து விடப் போவதோ இல்லை. ஏனெனில் எதிர்க் கட்சிகள் கொடுக்கும் நெருக்கடிகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவே அன்றி, நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காக அல்ல. தாம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு இம்முறை இடைஞ்சலாக உள்ளது என்பதினாலேயே தற்பொழுது இம்முறையை ஒழிப்பதெனப் பலமாகக் குரல் கொடுக்கின்றனர்.

அதை விடுத்து எதிர்க் கட்சிகள் 'ஜனநாயகத்தின்' பால் கொண்ட பற்றல்ல இ. கடந்த காலத்தில் பாராளுமன்ற அமைப்பு முறையினாலேயேதமது சர்வாதிகாரத் தனத்தைக் காட்டியவர்கள்தான் அவர்கள். ஜனாதிபதி ஆட்சிமுறை88.89-ம் ஆண்டில் சிங்கள இளைஞர்களில் சுமார் 60,000 பேரைக் கொன்ற தென்றால். பாராளுமன்ற ஆட்சி முறை 1972 இல் சுமார் 15,000 சிங்கள இளைஞரைக் கொன்றது.

ஆனால், இதில் எந்தமுறையானாலும், தமிழ் மக்களைப் பொறுத்து யாவும் ஒன்றே. ஏனெனில் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குப் பாராளுமன்ற அமைப்பு முறையோ அன்றி, ஜனாதிபதி அமைப்பு முறையோ தடையாக அமையப் போவதில்லை. தமிழர் பிரச்சினைத் தீர்விற்கு சிங்களப் பேரினவாத சக்திகளே தடையாகும். இந்நிலையில் பிரச்சினை தீர்வதானால்பேரினவாதசக்திகள் தமிழரின் உரிமையை அங்கீகரிக்க வேண்டும். அவ்வாறு பேரினவாத சக்திகள் மாறுமிடத்து, அது பாராளுமன்ற முறையாக இருந்தாலென்ன, ஜனாதிபதி முறையாக இருந்தாலென்ன பிரச்சினையை தீர்த்து வைத்து விடலாம்.

நோக்குடன் நான் அவரின் பாதையில் பிரவேசித்துள்ளேன் என அவர் கூறினார். இச்செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட கலாநிதி விக்ரமவீரசூரிய தகவல் தருகையில், மாகாண சபைத் தேர்தலில் தெரிவான எமது கட்சி உறுப்பினர் ஒருவர் பதவியை ராஜினாமாச் செய்தால் அவரின் இடத்திற்குத் திருமதி அத்துலத்முதலி நியமிக்கப்படுவார். இதற்கு கட்சிக்கு அதிகாரம் உண்டு எனக் குறிப்பிட்டார். இதற்காக எமது கட்சி உறுப்பினர்கள் பலர் தமது பதவியை ராஜினாமாச் செய்து விட்டுக்

மையாக உள்ள கிராமங்களில் அமைந்துள்ள சோதனை நிலையங்களில் உள்ள படையினர் மாலை 6 மணியுடன் வீதிப்போக்குவரத்தை தடை செய்கின்றனர். மட்டக்களப்பு நகரினுள் கண்டபடி எவரும் பிரவேசிப்பதை தடுக்கவே இந்நடவடிக்கை எனத் தெரிவிக்கப்பட்டது.

நகரினுள்ளும் பொலிசாரின் திடீர் சுற்றி வளைப்பும் தேடுதல்களும் நடைபெறுகின்றன. அண்மையில் நகரினுள் குண்டு வைக்கப்பட்ட பொதி ஒன்று அநாதரவான நிலை

## பிரேமா கொலையைஅருத்து பட்டாசு கொளுத்தினராம்

### மாத்தளையில் அறுவர்கைது

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட மே முதலாம் திகதி இரவு பட்டாசு கொளுத்திய பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் உட்பட ஆறு இளைஞர்கள் மாத்தளையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். ஊரடங்கு சட்டத்தை மீறி பட்டாசு கொளுத்தியதாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

கைதான இளைஞர்களில் ஒருவர் சிங்களவர் மற்றுமொருவர் தமிழிளைஞர் மூவர் முஸ்லிம் இளைஞர்கள் எனக் கூறப்படுகின்றது. இவர்கள் மாத்தளை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

## போட்டி

மட்டுவில் கொத்தணி மட்டப் பாடசாலைகளின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி 24.5.93 திங்கட்கிழமை பி.ப. 2மணிக்கு மூலாதாரப் பாடசாலையான யா. மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் கொத்தணி அதிபர் திரு. அ. பொ. செல்லையா தலைமையில் இடம் பெறும். [86]

## கட்டாய ஓய்வில்

(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சுங்கப் பணிப்பாளர் நாயகம் பீ. வீரசேகர அரசியல் காரணமாக முன்னர் சுங்க திணைக்களத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தற்போது சுங்கப்பகுதியின் விசேட புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய பிரதி சுங்கப்பணிப்பாளர் காமினி ராஜபக்ச ஓய்வில் அனுப்பப்பட்டுள்ளார்.

இலங்கை மின்சாரசபை வடக்கு, கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளூராட்சி சபைகளால் இதுவரை நிர்வகிக்கப்பட்டு வந்த மின் விநியோக வேலைகளை பொறுப்பேற்க உள்ளது உள்ளூராட்சி சபைகளின் கீழ் இவ் வேலைகள் இருந்த போது பல குறைபாடுகள் காணப்பட்டமையே இவற்றை மின்சார சபை பொறுப்பேற்பதற்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைகளிட பொறுப்பேற்பதன்மூலம் பாவனையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியும் என்றும் மின்சாரசபை மேலும் கூறியுள்ளது. உலக வங்கியின் உதவியுடன் மின்சார சபை தனது வேலைகளை அபிவிருத்தி செய்யவுள்ளது என்பதும், பாவனையாளர் களிடமிருந்து பெறப்படவேண்டிய நிலுவையை அறவிடுவதற்கு மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது என்பதும், குறிப்பிடத் தக்கதாகும்.

## மாகாணசபை உறுப்பினராக மலையகத்தில் 18 தமிழர்கள்

மலையகத்தில் இம்முறை மாகாணசபை தேர்தல் மூலம் 18தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நுவரெலியா மாவட்டத்தில் 10 தமிழர்களும். கண்டி மாவட்டத்தில் 3 தமிழர்களும் மாத்தளையில் ஒருவர் ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் நால்வருமாக இந்த 18 தமிழர்களும் தெரிவாகியுள்ளனர்.

இதேசமயம் கலைக்கப்பட்ட மாகாணசபையில் மத்திய மாகாணத்தில் 8 தமிழர்களும் ஊவா மாகாணத்தில் 3 தமிழரும் சப்பிரகமுவா மாகாணத்தில் இருவருமாக 13 தமிழர்களே உறுப்பினர்களாக இடம் பெற்றிருந்தனர். என்பது குறிப்பிடத்தக்கது.

### லால்ரட்ணாயக்கா நியமனம்

கொழும்பு மத்தியின் புதிய பொலிஸ் சுப்ரின்டனாகக் குற்றப் புலனாய்வுத் தலைமையக சிரேஷ்ட பொலிஸ் சுப்ரின்டன் லால் ரட்ணாயக்கா நேற்று முன்தினம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

### காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண

# பாக்- இந்தியா பேச்சு நடத்த அமெரிக்கா வற்புறுத்து

(டில்லி)

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு உதவுவதை பாகிஸ்தான் இனி மேலாவது நிறுத்த வேண்டும். அதேபோல இந்தியாவும் படை நடவடிக்கைகளை காஷ்மீரினுள் கட்டுப்படுத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனின் ஆலோசகர் ஜான் மலட் புதுடில்லியில் தெரிவித்தார்.

பத்து நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு புதுடில்லி வந்த அவர் அங்கு இந்திய அமெரிக்க ஆலோசகர்கள் மத்தியில் பேசுகையில் மேலும் இரு நாடுகளும் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வுகாண தீவிரமாக உழைக்க வேண்டும் இருதரப்பும் அமைதியான முறையில் பேச அமெரிக்கா தன்னாலியன்ற உதவி அளிக்கும் என்றும் தெரிவித்தார். ஆனால் அதற்கு முன்பாக இரு தரப்பும் கருத்தொருமித்து காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வுகாண தம்மை தயார் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அமெரிக்க அதிபர் பில்கிளிண்டனின் ஆலோசகர் ஜோன் மலட் காஷ்மீர் பிரச்சினையை இரு நாடுகளும் சுமுகமாக தீர்க்க வேண்டுமென்பதைவலியுறுத்துவதற்காகவே இந்த விஜயத்தை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜோன் மலட் புதுடில்லியில் மேலும்கூறுகையில் வன்முறை தொடர்ந்து இடம்பெற்றதால் புயல் மையம் கொள்வது போல இந்தப் பிரச்சினை மையம் கொண்டுள்ளது. காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஆதரவு காட்டுவது ஆதாரங்கள் மூலம் தெளிவாகியுள்ளது. பாகிஸ்தான் அதை நிறுத்தவேண்டும். இந்திய அரசும காஷ்மீர் மக்களுக்கு ஆக்கபூர்வமான அரசியல் சீர்திருத்தங்களை வழங்க ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## காஷ்மீர் பிரச்சினையை அமெரிக்கா கைவிடுக

### பாரதீயஜனதா கோரிக்கை

(டில்லி)

காஷ்மீர் பிரச்சினை பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுக்கு இடையிலான இருதரப்பு பிரச்சினையே எனவே இதனை அமெரிக்கா இவ் இரு நாடுகளிடமும் விட்டுவிட வேண்டும் என்றும் பாரதீய ஜனதாக்கட்சி கூறியுள்ளது.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் துணைத்தலைவர் அமெரிக்க கிளின்டன் நிர்வாகத்தைச் சேர்ந்த அதிகாரியான ஜான் மலட் தெரிவித்த கருத்துகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்தார்

இதேவேளை மனித உரிமைகள் என்ற போர்வையின் கீழ் அமெரிக்கா இந்தியப்பிரச்சினைகளில் தலையிட அரசு அனுமதிக்கக் கூடாது என மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும் கூறியுள்ளது

### நாடுகடத்தல்

சீனாவின் சட்டவிரோத குடியேற்றக்காரர் 158 பேரை மெக்ஸிக்கோ நாடுகடத்தியது. மேலும் 200 பேரைத்தேடி மெக்ஸிக்கோ அதிகாரிகள் வலை விரித்துள்ளனர்.

## அமெரிக்காவின் விருப்பை இந்தியா நிராகரிப்பு

மனித உரிமைகளை மதித்துப் போற்றுவதில் தனது மன உறுதி பூரணமானது என்று இந்தியா நேற்று தெரிவித்தது

நேற்றுப்புதுடில்லியில்செய்தியாளர்கள் மத்தியில் பேசிய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் மேலும் கூறுகையில்; மனித உரிமைகளை மதித்துப் போற்றுவதில் இந்தியா வேறு எந்த நாட்டிற்கும் சளைத்ததல்ல என்றும் தெரிவித்தார்.

அத்துடன் நட்பு நாடுகளோடு மனிதஉரிமைகள் பற்றி பேச்சு நடத்துவதில் இந்தியா எதிர்க்கவேஇல்லை. ஆனால், இந்த விடயத்தில் வேறுஎந்த இடத்திலிருந்தும் ஆலோசனை பெற இந்தியா விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமை ஸ்தாபனம்போன்ற சிலபொது அமைப்புக்கள், இந்தியா மீது மனித உரிமை மீறல் குறித்தான குற்றச்சாட்டுக்கள் காஷ்மீரில் காணப்படுவது போன்ற வழக்கத்திற்கு மாறான நிலைமையோடு தொடர்புபட்டது என்றும், அங்கு பாகிஸ்தான். இந்தியாவுக்கு எதிராக நிழற்போர் ஒன்றை நடத்தி வருகிறது என்றும் தெரிவித்தார். கிளிண்டன் நிர்வாகத்தை சேர்ந்த அதிகாரியான ஜான்மலட் காஷ்மீரில் மனிதஉரிமை மீறல் பற்றிக் கூறியவற்றிற்குப் பதிலளித்து இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரி கூறுகையில்; இத்தகைய சம்பவங்கள் எதையும் அரசு மன்னிப்பதில்லை என்றார். குறிப்பிட்ட திட்டவட்டமான குற்றச்சாட்டுகள் எதுவும் கவனத்திற்கு வந்தால் அவை குறித்து கவனிப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் காஷ்மீர் பிரச்சினை தீர்வு தொடர்பாக மத்தியஸ்தம் வகிக்க தயாராக இருப்பதாக அமெரிக்கா வெளியிட்ட விருப்பத்தை நிராகரித்தஅந்த அதிகாரி சிம்லா ஒப்பந்தத்தின் கட்டமைப்பிற்கு உட்பட்ட வகையில் இருதரப்பு பேச்சுக்கள் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

### குருவி பறக்கவும் தடை வரலாம்

முதலமைச்சர் ஜெயலலிதா போகின்ற போக்கைப் பார்த்தால் தனது வீட்டிற்கு மேலாகக் காக்கை, குருவி, வண்ணத்துப்பூச்சி என்பவை பறக்கவும் தடை விதிக்குமாறு கோரினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை எனத் தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தனது வீட்டிற்கு மேலாக அண்மையில் மர்ம விமானம் ஒன்று பறந்ததாக ஜெயலலிதா வெளியிட்ட கருத்துக் குறித்து விசாரணை நடத்த மத்திய அரசு விசாரணைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

ஈழநாதம்

# எனது அரசைக் கலைக்க எந்த காரணமும் இல்லை

## - ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

மத்திய அரசு தமிழக அரசை கலைத்துவிடும் அபாயம் ஏதும் இல்லை. எனது அரசைக் கலைக்க எந்தக் காரணமும் இல்லை என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்தார். நேற்று சென்னையில் செய்தியாளரிடம் பேசிய அவர் எல். ரீ. ரீ. ஈ. குறித்த மாநில அரசின் நடவடிக்கையில் தளர்வு ஏதும் இல்லை எனவும் கூறினார். மாநிலத்தில் தடைசெய்யப்பட்ட எல். ரீ. ரீ. ஈயின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்ற செய்தியை ஜெயலலிதா மறுத்தார்.

கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த முதலமைச்சர் ஜெயலலிதா மாமண்டூர் அருகே அண்மையில் 3 இலங்கைத் தமிழர் பொலிஸ் காவலில் இருந்து மீட்டெடுக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டமை குறித்து மாநில அரசு நீதிபதி அருணாசலம் தலைமையிலான விசாரணைக்குழுவை அமைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில்

# புலிகள் நடமாட்டம் அறிய 'கியூ' பிரிவு விசாரணை

(சென்னை)

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதா என அறிய பொலிசின் 'கியூ' பிரிவு விசேட பொலிசார் விசாரணைகள் நடத்தி வருகின்றனர். தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளின் நடமாட்டம் அதிகரித்துவிட்டதாக இந்திரா காங்கிரஸ் கட்சி அடிக்கடி கூறிவருவதை யடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் தமிழகத்தில் புலிகளின் நடமாட்டம் எதுவும் இல்லை என ஆளும் அ. தி. மு. கவினர் மறுத்து வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# இலங்கைத் தமிழ் அகதிகள் விபரம் திரட்ட முடிவு

## சென்னை காவல்துறை ஆணையாளர்

சென்னை நகரில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் பற்றிய விபரம் அறிவதற்கான தகவல் திரட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக காவல்துறை ஆணையாளர் ராஜகோபாலன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தற்போது சென்னையில் இருக்கும் இலங்கைத் தமிழர்களில் சுமார் 4600 பேர்வரையில் தமது புதிய முகவரிகளைப் பதிவு செய்துகொள்ளவில்லை என்றும், இவ்வாறு பதிவு செய்யாதோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## காஷ்மீர் போராளித் தலைவர் கைது

[டில்லி]

காஷ்மீர் போராளி அமைப்புகளில் ஒன்றான அல்ஜிகாத் அமைப்பின் தலைவர் அப்துல் அசீஸ் நேற்று அதிகாலை இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டார். இவருடன் இவரின் 10 மெய்க் காவலர்களும் கைதாகினர் என இந்திய வானொலி தெரிவித்தது.

## தொடர்பு கொள்ள கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின்தொழிற்படு பரப்பில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான நிவாரண முத்திரைகளுக்குரிய விநியோகம் அச்சங்கத்தின் கிளைகள் மூலமாக தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகிறது

மேற்படி சங்கம் தனது பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வேறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தம்மை இணைத்துக் கொண்டுள்ள தமது பகுதி மக்களை உடனடியாக தமது (தெல்லிப்பழை) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்பு கொள்மாறு சங்க பொதுமுகாமையாளர் கேட்டுள்ளார். (சி)

# லெப். கேணல் ராதா நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ். மாவட்ட தளபதி லெப். கேணல் ராதாவின் ஆறாம் ஆண்டு மாவீர நினைவஞ்சலிக்கூட்டம் நேற்று முன்தினம் வண்ணார்பண்ணை மேற்கு ஐயனார் சனசமூக நிலையத்தின் முன்பாக நடைபெற்றது.

மேடையின் அருகில் அமைக்கப்பட்ட பந்தலில் லெப். கேணல் ராதா, லெப். கிறிஸ்ரி, கப்டன் ஈழவன் ஆகியோரது உருவப்படங்கள் வைக்கப்பட்டு மலர் மாலை சூடி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

## ஞாயிறும் விநியோகம்

புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்க நிவாரண கிளைகளில் 1993 ஏப்ரல்மாத முதல் இரு வாரமும், கடைசி இரு வாரத்திற்குமான இலவச உலர் உணவு விநியோகம் இன்றும் நாளையும் நடைபெறுமென மேற்படி சங்கப் பாவனையாளர்கட்கு பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## இளைஞர் தற்கொலை

மனநோய்க்காளாகி கஷ்டமுற்றிருந்த இளைஞர் அலரி விதைகளை உட்கொண்டு மரணமானார்.

இச் சம்பவம் கடந்த 11ஆம் திகதி புலோலி கிழக்கு வராத்துப்பளையில் நடந்துள்ளது. மரணமானவர் தம்பிஐயா ஜெபநேசன் [வயது 32) என்னும் இளைஞராவார்.

இவரது மரணம் சம்பந்தமான விசாரணை மந்திகை வைத்தியசாலையில் நடைபெற்றபோது, உடுப்பிட்டிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு வி. நடராஜா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். (30)

# கோஷ்டி மோதலில் மூவர் பலத்த காயம்

(நெல்லியடி)

பழையபகைமை காரணமாக ஏற்பட்ட கோஷ்டிச் சண்டையில் கம்பிகள், கற்கள், போத்தல் ஓடுகளின் தாக்குதல்களுக்காளாகிய ஒருபெண்மணி உட்பட மூவர் காயங்களுடன் மந்திகை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை 5 மணியளவில் துன்னாலை கலிகைச்சந்தி வேம்படி என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது.

பலத்த காயங்களுக்காளாகிய திருமதி தம்பித்துரை சுந்தரி (வயது 46), செல்வராஜா சிவகுமார் (வயது16), கணபதி பரமேஸ்வரன் (வயது 22), ஐயன் சிவபாதம் (வயது 50) ஆகியோர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இது சம்பந்தமாக தகவல் அறிந்த பருத்தித்துறை காவல் துறையினர் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று பலரைக் கைது செய்ததுடன் சந்தேகத்திற்குரியவரான வைத்தியசாலையில் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த ஐயன் சிவபாதம் வயது (50) காவல் துறையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இவ்வேளை மற்றொரு காயக்காரரான கணபதி பரமேஸ்வரன் (வயது22)என்னும் இளைஞர் மருத்துவமனை வார்ட்டிலிருந்து தலைமறைவாகியுள்ளார். (30)

# யாழ். பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானக் கண்காட்சி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞானபீடம் க. பொ. த சாதாரண/உயர்தர மாணவர்களுக்கான விஞ்ஞானக் கண்காட்சியொன்றை 24ஆம் திகதி திங்கள் தொடக்கம் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடாத்தவிருக்கின்றது. வருகை தர விரும்பும் மாணவர்களின் நாளையும், நேரத்தையும் பாடசாலை அதிபர்கள் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். எல்லாக் காட்சிப் பொருள்களையும் பார்ப்பதற்கு பலமணிநேரம் தேவைப்படுமெனவும் எனவே மாணவர்கள் அதற்குரிய ஆயத்தங்களுடன் வரும்படியும், காலை 8-30 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையுமே நுழைவுச் சீட்டுக்கள் நுழைவாயிலில் விற்கப்படுமெனவும் கண்காட்சிப் பொறுப்பாளர் அறிவிக்கின்றார்.

வடக்கு-கிழக்கிற்கு அப்பால் வாழும்

# தமிழரின் ஏக பிரதிநிதிகள் இல. தொழிலாளர் காங்கிரசே

## —செல்லச்சாமி

(கொழும்பு)

வடக்கு கிழக்கிற்த அப்பால் வாழும் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் இலங்கை தொழிலாளர் காங்கிரசே. இதனையே மாகாணசபை தேர்தல் முடிவுகளும் காட்டியுள்ளன என இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அவசர காலச் சட்டம் நீடிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அமைச்சர் செல்லச்சாமி இவ்வாறு தெரிவித்தார்.

# வெளிநாட்டார் வருகைக்கு குவைத்தில் கட்டுப்பாடு

குவைத்தில் தனியார் நிறுவனங்களில் கடமை புரியும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை சுமார் ஐந்து லட்சத்துக்கு மேல் இருகக்க் கூடாது என குவைத் அரசாங்கம் உச்ச எல்லையை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குவைத் தனியார் நிறுவனங்களில் தற்போது 4 லட்சத்து 37ஆயிரம் வெளிநாட்டவர்கள் பணி புரிகிறார்கள் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவர்களில்அதிகஅளவானோர் இந்தியர்களும், பாகிஸ்தானியர்களும் என்றும் கூறப்படுகிறது. (17)

## பல்கலைக்கழக

(விசேட) இல் நடைபெற்ற க. பொ. த. (உ/த) பரீட்சையில் தகுதி பெற்ற மாணவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக பரீட்சைகள்/அனுமதிக் கிளையினால் 1993-05-24-ம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்படும். தகுதி பெற்ற மாணவர்கள்

## எயர்லங்கா

செயலர் கே. எம். அபேசிங்க, இலங்கை வங்கி பொதுமுகாமையாளர் திருமதி ஆர். எல். நாணயக்காரஆகியோர் இடம் பெறுகின்றனர்.

ஜனாதிபதிவிஜயதுங்கபதவி ஏற்றதும் முன்னைய பணிப்பாளர் சபையை கலைக்க உத்தர விட்டது தெரிந்ததே.

## தேர்தல்

அதிகரித்தமைக்கு காரணமாகும் எனவும் குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

# பலாலியிலுள்ள இளைஞரை விடுவிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளில் ஒரு பகுதியினரை விரைவில் விடுதலை செய்வதற்குமுயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி மிக விரைவில் பலாலி இராணுவத் தளத்துக்குச் சென்று மேற்படி முயற்சியில் ஈடுபடுவார் என்று தெரிய வருகிறது கடலில் வைத்து கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் சிலரும் அடங்குவார்கள் என்று தெரிய வருகிறது.

# ஐ. ஐ. தே. முன்னணியின் பிரமுகர் கார் எரிப்பு

[மாத்தளை]

மாத்தளை மண் தண்டாவளையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஏற்பாடு செய்திருந்த கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ள வருகைதந்த அக்கட்சி முக்கியஸ்தர் ஒருவரின் கார் கடந்த ஞாயிறு இரவு இனந்தெரியாத நபர்களினால் எரித்து நாசமாக்கப்பட்டது.

அதேதினம் அக்கட்சி உறுப்பினர் ஒருவரின் வீட்டை

## ஐ. தே. க.

பான்மை உள்ளதாக நிரூபித்த போதிலும் இவ்வாறு ஆளுநர் நடந்துகொண்டமை ஜனநாயகத்தைக் கேலிக்குரியதாக்கும் நடவடிக்கை என அவர்

## சமுகமளிக்க கோரிக்கை

யாழ். மாவட்டத்தின் பல்வேறு நிறுவனங்களிலும் கடமையாற்றும் பின்வரும் அதிகாரிகளை நாளை மறுதினம் காலை 10.30 மணிக்கு யாழ். செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுள்ளார்:

இதன்படி உதவி அரசாங்க அதிபர்கள் அல்லது அவர்களின் நிர்வாக உத்தியோகத்தர்கள், மாவட்டத் திட்டப் பணிப்பாளர், திட்டமிடல்பிரதிப் பணிப்பாளர், பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்கள், நீர்ப்பாசன பொறியியலாளர், கமநல சேவை உதவி ஆணையாளர் (தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள்)பிரதேசசபை தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், சிறுகைத்தொழில்பணிப்பாளர் (கச்சேரி), விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர், கால்நடைத் திணைக்களப் பணிப்பாளர், மீன்பிடி விரிவாக்க உத்தியோகத்தர், வீதி அதிகார அமைப்புப் பொறியியலாளர் ஆகியோரையே சமுகமளிக்குமபடி யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார்

## 29லட், 93ஆயிரம் வாக்குகள்

7 மாகாணங்களிலும் ஐ. தே. கவிற்கு மொத்தமாக 29 இலட்சத்து 93 ஆயிரத்து 353 வாக்குகள் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுதந்திரக்கட்சி தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு 23 லட்சத்து நான்காயிரம் வாக்குகள் மொத்தமாக பதிவாகியுள்ளன.

# அழைத்து மகிழுங்கள்

சென்னை நகரில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் பற்றிய விபரம் அறிவதற்கான தகவல் திரட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக காவல்துறை ஆணையாளர் ராஜகோபாலன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தற்போது சென்னையில் இருக்கும் இலங்கைத் தமிழர்களில் சுமார் 4600 பேர்வரையில் தமது புதிய முகவரிகளைப் பதிவு செய்து கொள்ளவில்லை என்றும், இவ்வாறு பதிவு செய்யாதோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தியில் இருந்து இடம் பெயர்ந்து வேறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தம்மை இணைத்துக் கொண்டுள்ள தமது பகுதி மக்களை உடனடியாக தமது (தெல்லிப்பழை) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்பு கொள்மாறு சங்க பொதுமுகாமையாளர் கேட்டுள்ளார். (சி)

## காஷ்மீர் போராளித் தலைவர் கைது

[டில்லி]

காஷ்மீர் போராளி அமைப்புகளில் ஒன்றான அல்ஜிகாத் அமைப்பின் தலைவர் அப்துல் அசீஸ் நேற்று அதிகாலை இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டார். இவருடன் இவரின் 10 மெய்க் காவலர்களும் கைதாகினர் என இந்திய வானொலி தெரிவித்தது.

## லெப். கேணல் ராதா நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ். மாவட்ட தளபதி லெப். கேணல் ராதாவின் ஆறாம் ஆண்டு மாவீர நினைவஞ்சலிக்கூட்டம் நேற்று முன்தினம் வண்ணார்பண்ணை மேற்கு ஐயனார் சன சமூக நிலையத்தின் முன்பாக நடைபெற்றது.

மேடையின் அருகில் அமைக்கப்பட்ட பந்தலில் லெப். கேணல் ராதா, லெப். கிறிஸ்ரி, கப்டன் ஈழவன் ஆகியோரது உருவப்படங்கள் வைக்கப்பட்டு மலர் மாலை சூடி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இவ் அஞ்சலிக் கூட்டத்தில் வலிகாமம் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி சந்திரிகா, வலிகாமம் மாவீரர் பணி மனைப் பொறுப்பாளர் திரு வவா ஆகியோர் உரையாற்றினார்கள். உரையை அடுத்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (சி)


# அழைத்து மகிழுங்கள்

திருவிழாக்கள் மற்றும் கலை விழாக்கள்

" தமிழ்த்தாய் வில்லிசைக்குழு "

கொடிகாமம்.

தொடர்பு:

A. V. M.
கொடிகாமம்.

கிருஸ்ணா கூல்பார்
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

(4087)



# ஸ்ரீதர் திரையரங்கில்

# In the Line of Duty

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி

[சி-6575]



# தேவை

## 1. அச்சுக்கோர்ப்பாளர் (Compositors)

## 2. ஒப்பு நோக்குநர் (Proof - Readers)

இவ்விரு துறையிலும் பயிற்சி உடையவர்கள் தமது அனுபவச் சான்றிதழ்களுடன் (24-05 93) திங்கட்கிழமை நேரில் சமுகம் தரும்படி கோரப்படுகின்றது.

தொடர்பு:- மாறன் பதிப்பகம்
664, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(4936)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 22 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## உற்சவம் ஆரம்பம்

வட்டு மேற்கு சின்னக்கதிர்காமம் கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இக்கோவில் தேர்த்திருவிழா 2 ஆம் திகதி புதன்கிழமையும் தீர்த்தத்திருவிழா 3 ஆம் திகதி வியாழக்கிழமையும் நடைபெறும்.

## மெரினாலில் உரம்

(நெல்லியடி)

840 மெ தொன் மா, 80 மெ. தொன் எம் ஓ பி. அடிக்கட்டு உரம் முதலியவற்றுடன் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்ட மெரினால் கப்பல் நேற்றுக்காலை பருத்தித்துறையை வந்து சேர்ந்தது

இதில் எடுத்து வரப்பட்ட உரம், கடந்த வருடம் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டு, காங்கேசன்துறை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததென, கெயர் ஸ்தாபன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (30)

## இடமாற்றம்

[நெல்லியடி]

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரிந்து வந்த டாக்டர் செல்வி எஸ். இரத்தினசபாபதி இம்மாதம் 18-ம் திகதியிலிருந்து மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றலாகியுள்ளார். (30)

## குவைத்தில் கட்டுப்பாடு

குவைத்தில் தனியார் நிறுவனங்களில் கடமை புரியும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை சுமார் ஐந்து லட்சத்துக்கு மேல் இருக்கக் கூடாது என குவைத் அரசாங்கம் உச்ச எல்லையை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குவைத் தனியார் நிறுவனங்களில் தற்போது 4 லட்சத்து 37 ஆயிரம் வெளிநாட்டவர்கள் பணி புரிகிறார்கள் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இவர்களில் அதிக அளவானோர் இந்தியர்களும், பாகிஸ்தானியர்களும் என்றும் கூறப்படுகிறது. (17)

### பல்கலைக்கழக

(விசேட) இல் நடைபெற்ற க. பொ. த. (உ/த) பரீட்சையில் தகுதி பெற்ற மாணவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக பரீட்சைகள்/அனுமதிக் கிளையினால் 1993-05-24-ம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்படும். தகுதி பெற்ற மாணவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை, பரீட்சைப்பெறுபேறுகள். பெற்ற புள்ளிகள் ஆகியவற்றைச் சமர்ப்பித்து பத்திரங்களைப் பெற்று, அவற்றைப் பூர்த்திசெய்து 1993-06-10-ம் திகதிக்குமுன் யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் திரும்ப ஒப்படைத்தல் வேண்டும்.

க. பொ. த. (உ/த) பரீட்சையில் ஒரே முறையில் குறைந்தது அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களிற் சித்தி பெற்றிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நான்காவது பாடத்தில் 25·/. புள்ளிகளுக்குக் குறையாமலும் மொத்தப் புள்ளிகள் 180க்குக் குறையாமலும் பெற்ற மாணவர்களே இப்பத்திரங்களைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

பல்கலைக்கழகத்தில் / பல்கலைக்கழகக் கல்லூரியில்/ இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியில்/ உள்நாட்டு வைத்திய, நுண்கலைநிறுவனங்களில் பதிவு செய்த மாணவரோ அங்கு கற்கை நெறியொன்றினைப் பின்பற்றி வரும் மாணவரோ (மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் தேசியதொழிநுட்பவியல் டிப்புளோமாப் பயிற்சிநெறிக்குப் பதிவுசெய்த மாணவர்கள் உட்பட) பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க இடமளிக்கப்படமாட்டார்கள். இத்தகைய பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்பட்டு ஆனால் அனுமதியைத்தள்ளிப் போட்டுக் கொண்டவர்களுக்கும் பொருந்தும். அப்படியானவர்கள் விண்ணப்பித்தல் ஆகாது.

கட்டடச் சூழல் (கட்டடக் கலை) கற்கைநெறி அனுமதிக்குக் கருத்திற்கொள்ளப்பட விரும்பும் அபேட்சகர்கள், மேலதிகமாக மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்ற அப் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

### எயர்லங்கா

செயலர் கே. எம். அபேசிங்க, இலங்கை வங்கி பொதுமுகாமையாளர் திருமதி ஆர். எல். நாணயக்கார ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

ஜனாதிபதி விஜயதுங்க பதவி ஏற்றதும் முன்னைய பணிப்பாளர் சபையை கலைக்க உத்தர விட்டது தெரிந்ததே.

### தேர்தல்

அதிகரித்தமைக்கு காரணமாகும் எனவும் குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

### தென்

அடுத்தவாரம் பதவி ஏற்கவுள்ளனர்.

மேல் மாகாண சபையின் புதியமுதலமைச்சராக திருமதி சந்திரிகா குமாரணதுங்க பதவி ஏற்றார். மேல்மாகாண ஆளுநர் சர்வானந்தா முன்னிலையில் நேற்றுப் பிற்பகல் திருமதி சந்திரிகா பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

### தொலைக்கல்வி

சித்தியடைந்தவர் தங்களது சம்பள மீளாய்வுப் படிவங்களை யாழ். இந்துக்கல்லூரியில் இயங்கும் தொலைக்கல்வி நிலையத்தில் வரும் திங்கள் அல்லதுவெள்ளியன்றுபெற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

### பாதையை

ளாக மேற்படி அமைப்புக்களைச்சேர்ந்த அதிகாரிகள் அரசின் உயர் அதிகாரிகளைச் சந்தித்து தமது கருத்துக்களை வலியுறுத்தியதாக கொழும்பில் இருந்து நேற்று மாலை எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளுடனும் மேற்படி அமைப்புக்களின் அதிகாரிகள் பேச்சு நடாத்தியதாகவும் தெரியவருகிறது.

### பல்கலை

தல்வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரிகள் 93.5.20 க்கு முன் விண்ணப்பிக்கவேண்டும் எனவும், இவர்களுக்கான பரீட்சை 93 6 12 இல் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 8-ம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இது தொடர்பான விளம்பரம் ஒன்றைப் பிரசுரித்துள்ளது.

## விடுவிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளில் ஒரு பகுதியினரை விரைவில் விடுதலை செய்வதற்குமுயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி மிக விரைவில் பலாலி இராணுவத் தளத்துக்குச் சென்று மேற்படி முயற்சியில் ஈடுபடுவார் என்று தெரியவருகிறது கடலில் வைத்து கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் சிலரும் அடங்குவார்கள் என்று தெரியவருகிறது.

## ஐ. ஐ. தே. முன்னணியின் பிரமுகர் கார் எரிப்பு

[மாத்தளை]

மாத்தளை மண் தண்டாவளையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஏற்பாடு செய்திருந்த கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ள வருகைதந்த அக்கட்சி முக்கியஸ்தர் ஒருவரின் கார் கடந்த ஞாயிறு இரவு இனந்தெரியாத நபர்களினால் எரித்து நாசமாக்கப்பட்டது.

அதேதினம் அக்கட்சி உறுப்பினர் ஒருவரின் வீட்டை தீவைத்துக் கொளுத்த சிலர் முயற்சி மேற்கொண்டனர். எனினும் ரோந்து சென்ற பொலிசாரினால் அம் முயற்சி முறியடிக்கப்பட்டது. இதையடுத்து அரசியல்வாதி ஒருவரின் ஜீப் வண்டியை பொலிசார் கைப்பற்றினர். ஆனால் ஜீப்பில் பயணம் செய்த 15பேர் தப்பி ஓடிவிட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

### ஐ. தே. க.

பான்மை உள்ளதாக நிரூபித்த போதிலும் இவ்வாறு ஆளுநர் நடந்துகொண்டமை ஜனநாயகத்தைக் கேலிக்குரியதாக்கும் நடவடிக்கை என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இது ஜனநாயகக் கோட்பாடுகளை மீறிய செயல் மாத்திரமல்லாமல் அரசியல் யாப்பு விதிகளை மீறியசெயலுமாகும் புதிய ஜனாதிபதியின் தெரிவுடன் மக்கள் சுதந்திரமாகவும், சுயமாகவும் ஜனநாயக உரிமைகளைச் செயற்படுத்தலாம் என்று நாம் நம்பியிருந்தோம் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதியைச் சந்தித்து. ஆளுநர்களை அரசியல் யாப்புகககமையக் கருமமாற்றுமாறு பணிக்கும்படி கேட்டுக்கொண்டனர் என்று தெரிவித்த தர்மசிறி சேனநாயக்கா, தம்மை ஆளுநர்களைச் சந்தித்து இதுபற்றி தெரிவிக்கும்படியும் கூறப்பட்டதாகத் தெரிவித்தார்.

### அனைவருக்கும்

யார் கம்பனிகளிலோ வேலை செய்ய விரும்புகிறார்கள். இதற்குக் காரணம் அவர்கள் வேலையில் இருந்து இளைப்பாறும்போது ஓய்வூதியம் அல்லது சேமலாபநிதியைப் பெறலாம் என்பதினாலாகும். அதன்மூலம் அவர்கள் தமக்கும் தம்மில் சார்ந்திருப்போருக்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றனர் என அமைச்சர் குறிப்பிட்டார்.


# மரண அறிவித்தல்

## வேதிலிங்கம் அன்னப்பிள்ளை

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த வேதிலிங்கம் அன்னப்பிள்ளை 20-05-93 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வேதிலிங்கத்தின் அன்பு மனைவியும், திரு. தம்பித்துரையின் (இ. போ. ச. பரிசோதகர்) அன்புத் தாயாரும், திருமதி வள்ளியம்மா தம்பித்துரையின் மாமியாரும், திருமதி தர்மகுலசிங்கம் (பிரான்ஸ்), திருமதி இந்திரதாஸ் (பிரான்ஸ்), திருமதி சந்திரதாஸ், திருமதி ஜெயதாஸ் (பிரான்ஸ்) திருமதி மனோஜா குலதாஸ் (கனடா) செல்வன் சிவதாஸ் (பிரான்ஸ்) செல்வன் செல்வதாஸ் (பிரான்ஸ்), செல்வன் விஜயதாஸ் ஆகியோரின் அன்பு பேத்தியும், சதீஸ், ரஜீன், தர்ஷிகா, டனீஷன் சுயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

விஜயதாஸ் (பேரன்)

(4932)